# ஹிந்தி எதிர்ப்பு ஜாதா காரியதரிசிக்கு வேண்டுகோள்.

(சோழவந்தான் டி. ஆவடையப்பன் கடிதம்)

சோழவந்தான், செப். 20.

அன்புடையீர்!

நலம். விரும்புவது மஃதே.

தாங்கள் தமிழ் மொழிக்காகவும், தமிழர்களுக்காகவும் அருந்தொண்டாற்றுவதை, உண்மையில் தான் தமிழ் நாட்டைச் சேர்ந்தவனென்றும், தமிழன் என்றும் சொல்லிக் கொள்பவர்கள் போற்றாமலிருக்க முடியாது. ஜாதா புறப்படுவதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் பொழுது போலி-வேஷத் தமிழர்களாகிய தமிழ்ப் பண்டிதர்களும், பண்டாரச்சன்னதிகளும் வாளா வீற்றிருப்பது ஞாயமோ? இதுவரையிலும் 100 தோழர்கள் தான் பேர் கொடுத்திருப்பதானது நம் தமிழர்களுக்கும், தமிழ் அன்பர்களுக்கும் வெட்கமில்லையா?

ஜாதா எங்கிருந்து புறப்படுவதாக உத்தேசம்? புறப்படுமுன் ஜாதாக்கள் எங்கெங்கிருந்து புறப்படுமென்று தெரிவித்தால் நலமாயிருக்கும். ஜாதா வருவதற்கு நிகழ்ச்சிக் குறிப்பு அச்சடித்துப் பிரசுரம் செய்தால் அந்த அந்த ஊர்த் தோழர்கள் வரவேற்பதற்கும் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்வதற்கும் ஏதுகாமாயிருக்குமென்று நினைக்கிறேன். நான் இவ்விடத்தில் ஓர் உண்டியல் தயார் செய்து அதன் மூலம் வசூல் செய்து ஜாதாவிற்கு வேண்டிய பொருளுதவி செய்யலாமென்றிருக்கிறேன். இதே மாதிரியாக மற்ற சுயமரியாதை, ஜஸ்டிஸ் தோழர்களும், முக்கியமாக தமிழ்ப் பொது மக்களும் பின்பற்றினால் மிகவும் நலமாயிருக்குமென்று நம்புகிறேன். ஜாதாவிற்கு கொடி தமிழ்த்தாயை ஆபத்து சூழ்ந்து கொண்டிருப்பது போல படம் போட்ட கொடியுடனிருந்தால் நலமென்று நினைக்கிறேன். ஜாதா தொண்டர்களுக்கெல்லாம் ஒரேமாதிரியான உடுப்பாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் பொதுமக்களுக்கு ஓர் உணர்ச்சி ஏற்படும். ஆகையால் தயவு செய்து என்னுடைய யோசனையைப் பற்றி 'விடுதலை', 'குடியரசு' இன்னும் மற்ற பத்திரிகைகளில் பிரசுரம் செய்தால் நலம்.